Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 14, 2025

வெள்ளிக்கிழமை 14, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 179 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வேலை நிறுத்தம் வாபஸ்

அனுராதபுரம் போதான வைத்தியசாலையில்,பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அனுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் வியாழக்கிழமை (13) காலை தொடங்கிய வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க (GMOA) துணைச் செயலாளர் டாக்டர். அஜந்த ராஜகருணா தெரிவித்தார்.

### தமிழரசுக் கட்சியை

# “சிதைக்க சதி”



தமிழரசுக் கட்சிக்கு எதிராக பல்வேறு சதி வலைகள் பின்னப்படுகிறது.

அதிலும் தமிழரசுக் கட்சியை எப்படியாது சிதைத்து அதை உடைத்து கட்சியை பிளவு படுத்தி விட வேண்டும் என சிலர் செயற்படுகின்றனர். என தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழில் உள்ள அவரது அலுவலகத்தில் வியாழக்கிழமை (13) நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், புதிய தமிழரசுக் கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகிறது. உண்மையில் அப்படி கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை. அப்படியான எண்ணங்கள் கூட அவர்களிடத்தே இல்லை. ஏனெனில் கட்சியில் பலருடனும் இது தொடர்பில் பேசியிருந்த போது அவர்கள் அனைவரும் இதனை மறுதலித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## பூஸ்ஸ முன்னாள் அத்தியட்சகர் சுட்டுக்கொலை

பூஸ்ஸ சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் சிறிதத் தம்மிக்க அக்மீமன பகுதியில் இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரால் வியாழக்கிழமை (13) சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முன்னாள் கண்காணிப்பாளர் தனது வீட்டின் முன் உள்ள முற்றத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றார்.

துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் கண்காணிப்பாளரின் தலை மற்றும் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## முதல் செயற்கை இதய அறுவை சிகிச்சை வெற்றி

இதய செயலிழப்பால் பாதிக்கப்பட்ட ஆஸ்திரேலிய நபர் ஒருவர், செயற்கை இதய மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருத்துவமனையில் இருந்து வெளியேறிய உலகின் முதல் நபராக உருவெடுத்துள்ளதாக தி கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாற்று அறுவை சிகிச்சை “குறிப்பிடத்தக்க மருத்துவ வெற்றி" என்று ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பின்னால் உள்ள மருத்துவர்கள் புதன்கிழமை (12) அறிவித்துள்ளனர்.

மார்ச் மாத ஆரம்பத்தில் அவருக்கு நடைபெற்ற மாற்று இதய அறுவை சிகிச்சைக்கு முன்னதாக, BiVACOR சாதனத்துடன் அந்த நோயாளி 100 நாட்களுக்கு மேல் உயிர் வாழ்ந்ததை அடுத்து இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




# “மௌனத்தை கலைப்போம்”

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை (13) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில் பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களும் முடிவு கொண்டுவர “மௌனத்தை கலைப்போம்” எனும் தொனிப்பொருளில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்ட பேரணி, தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது. (மேலதிக படங்கள் 3ஆம் பக்கத்தில்)

- நிதர்ஷன் வினோத்

## சனிக்கிழமை காலை 8 மணி முதல் 8.05 மணிவரை

# கண்ணில் கண்டால் கணக்கெடுக்கவும்









பயிர்களை சேதப்படுத்தும் விலங்குகளின் கணக்கெடுப்பை சனிக்கிழமை (மார்ச் 15) நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விவசாய அமைச்சு எடுத்துள்ளது.

இந்த நோக்கத்திற்காக விநியோகிக்கப்பட்ட படிவத்தின்படி, விவசாயிகள் தங்கள் நிலங்களில் அத்தகைய விலங்குகளின் நடமாட்டத்தைக் கணக்கிட ஐந்து நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

படிவத்தின்படி, விலங்குகள் கணக்கெடுப்பு 15 மார்ச் 2025 அன்று காலை 8 மணி முதல் காலை 8.05 மணி வரை நடத்தப்படும்.

முன்னதாக, விவசாய, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகம், விலங்கு கணக்கெடுப்பு தொடர்பான ஆவணங்களை அச்சிடுவதற்கு ரூ. 2.4 மில்லியன் செலவிடப்பட்டதாகவும், ஒவ்வொரு கணக்கெடுப்பு தாளுக்கும் கிட்டத்தட்ட 30 சதம் செலவாகும் என்றும் தெரிவித்தது.

கணக்கெடுப்பு ஆவணங்களை அச்சிடுவதற்கு VAT உட்பட மொத்தம் ரூ. 2,478,000 செலவிடப்பட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், கணக்கெடுப்பிற்காக இதுபோன்ற சுமார் 7 மில்லியன் ஆவணங்களைத் தயாரிக்க அரசு அச்சுத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சனிக்கிழமை விலங்கு கணக்கெடுப்பை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் நடத்துவதற்காக விவசாய அமைச்சக வளாகத்தில் ஒரு கரும பீட அறை நிறுவப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரங்குகள், செங்குரங்குகள், மர அணில்கள் மற்றும் மயில்கள் போன்ற பயிர்களை சேதப்படுத்தும் விலங்குகள் குறித்த கணக்கெடுப்பை மேற்பார்வையிட ஒரு சிறப்புக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் அலுவலகம் அவசர எச்சரிக்கை



பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் தற்போது விளம்பரப்படுத்தப்படும் மோசடியான கிரிப்டோ பண வர்த்தகம் தொடர்பான மோசடியான விளம்பரங்களை பிரதமர் அலுவலகம் வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்த மோசடி விளம்பரங்களை சமூக ஊடகங்கள் ஊடாக ஊக்குவித்து, இலங்கை மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் வெளிநாட்டு நிறுவனங்கள் செயற்பட்டுவருவதுடன்,

தொடர்ச்சி P2

## சஜித்துக்கு ரணில் காலக்கெடு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு காலக்கெடு விதித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொழும்பு மாநகர சபையில் போட்டியிடுவதற்காக, ஐக்கிய மக்கள் சக்திக்கு (SJB) எதிர்வரும் 20ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த மேற்கண்ட முடிவை, சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற அமைப்பாளர்களுக்கான நியமன நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன அறிவித்துள்ளர்.

## பிக்கு படுகொலை கொலை:

# நாடு திரும்பிய பெண் கைது

சீதுவ காவல் பிரிவுக்குட்பட்ட வெத்தெவ பகுதியில் 14.09.2022 அன்று புத்த பிக்கு ஒருவரின் கொலை மற்றும் சொத்துக்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சீதுவ காவல் நிலையம் மேலும் விசாரணைகளைத் தொடங்கியது. இந்தக் கொலையை அதே விகாரையில் வசிக்கும் ஒரு துறவி செய்திருப்பதும், துறவியுடன் தொடர்பில் இருந்த வெளிநாட்டில் வசிக்கும் ஒரு பெண் இந்தக் கொலையைச் செய்ய சதித்திட்டம் தீட்டியிருப்பதும் தெரியவந்தது. விசாரணைக்குப் பிறகு, இந்த சந்தேக நபர் தொடர்பான உண்மைகள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, சந்தேக நபருக்கு எதிராக விமானப் பயணத் தடை பெறப்பட்டது.

தொடர்ச்சி P2



## மொட்டில் மீண்டும் இணைந்தார் லொஹான்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் (SLPP) மீண்டும் இணைந்துள்ளார்.

முன்னதாக, 2024 ஜனாதிபதித் தேர்தலில் தேசிய ஜனநாயக முன்னணி (NDF) வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கேவுக்கு ஆதரவளிக்க ரத்வத்த, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் யிலிருந்து வெளியேறினார், அதே நேரத்தில் அவர் பொதுத் தேர்தலிலும் போட்டியிடவில்லை.

இருப்பினும், கண்டியில் ஊடகங்களுக்கு திங்கட்கிழமை (10) உரையாற்றிய லொஹான் ரத்வத்த, உள்ளூராட்சித் தேர்தலுக்காக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் மீண்டும் இணையும் தனது நோக்கத்தை அறிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட தலைமையை ஏற்கத் தயாராக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த கூறினார்.

வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கை பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு தனது முழு பங்களிப்பையும் வழங்குவதாக ரத்வத்த உறுதியளித்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## முதல் செயற்கை இதய அறுவை சிகிச்சை வெற்றி

இந்த சாதனை செயல்முறையை சிட்னியின் செயிண்ட் வின்சென்ட் மருத்துவமனையில் இருதய மற்றும் தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் பால் ஜோன்ஸ் மேற்கொண்டுள்ளார்.

இது ஒரு மனித இதயத்திற்கு முழுமையான மாற்றாக செயல்பட முடியும், ஆரோக்கியமான இதயத்தின் இயற்கையான இரத்த ஓட்டத்தை பிரதிபலிக்க காந்த லெவிட்டேஷன் (magnetic levitation) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

இதய மாற்று அறுவை சிகிச்சை தானம் செய்யப்படும் வரை நோயாளிகளை உயிருடன் வைத்திருக்க இந்த உள்வைப்பு ஒரு பாலமாக வடிவமைக்கப்பட்டுள்ளது, ஆனால் இதய மாற்று அறுவை சிகிச்சை தேவையில்லாமல் உள்வைப்பு பெறுபவர்கள் தங்கள் சாதனத்துடன் வாழ முடியும் என்பதே BiVACOR இன் நீண்டகால இலட்சியமாகும் என வைத்திய நிபுனர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிரதமர் அலுவலகம் அவசர எச்சரிக்கை

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கையின் பிரபலமானவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி இந்த மோசடியான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

இந்த விளம்பரங்களின் முக்கிய நோக்கம் இந்த நாட்டில் உள்ள பிரபலமானவர்கள் குறித்த மக்களின் நல்லெண்ணத்தை மலினப்படுத்துவதன் மூலம் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதும், பிரபலமானவர்கள் மீதான நம்பிக்கையைச் சிதைப்பதும் ஆகும்.

லிதுவேனியாவில் இருந்து செயற்படும் இந்த மோசடி கணக்குகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த மோசடியான விளம்பரங்கள் இலங்கையில் உள்ள முகநூல் பாவனையாளர்களை குறிவைத்து தீவிரமாக செயற்படுவதாக எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் கிரிஷாந்த அபேசேன மற்றும் பிரபல ஊடகவியலாளர்களான அமந்தா பெரேரா மற்றும் சுனந்த தேசப்பிரிய மற்றும் முன்னைய சில சந்தர்ப்பங்களில் இலங்கையின் ஏனைய பிரபலங்களும் இந்த விளம்பரங்கள் மூலம் அண்மையில் இலக்கு வைக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பாக அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரபலங்களால் அங்கீகரிக்கப்பட்டதாகப் பொய்யாகக் கூறும் கிரிப்டோ பண முதலீடுகளை ஊக்குவிக்கும் இணைய விளம்பரங்கள் குறித்து பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எந்தவொரு அரசாங்க அதிகாரியோ அல்லது அமைச்சோ எந்தவிதமான கிரிப்டோ பண முதலீட்டுத் திட்டத்தையும் அங்கீகரிக்கவில்லை.

மேலும், முறையிடும் (Report) மற்றும் நீக்கும் (Remove) கோரிக்கைகள் இருந்தபோதிலும், இந்த மோசடிகள் சமூக ஊடக தளங்களில் தொடர்ந்து தோன்றிவருவதுடன், மோசடியான விளம்பரங்களை உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கான பேஸ்புக்கின் இயலாமை குறித்த கடுமையான சந்தேகங்களையும் கரிசனைகளையும் எழுப்புகிறது. இந்த ஏமாற்று வணிகங்கள் பரவுவதைத் தடுக்கவும், நிதி மோசடிகளிலிருந்து இலங்கைப் பயனர்களைப் பாதுகாக்கவும் உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு META (Facebook இன் தாய் நிறுவனத்திடம்) கேட்டுக்கொள்கிறோம்.

பிரபலமானவர்களின் அங்கீகாரம் உள்ளதாகக் கூறப்படும் சந்தேகத்திற்கிடமான விளம்பரங்களில் ஈடுபடவோ அல்லது அவற்றை கிளிக் செய்யவோ வேண்டாம் என்றும், மேலும் Facebook மற்றும் Instagram இல் மோசடியான விளம்பரங்களை அந்தந்த நிறுவனங்களுக்கு நேரடியாக முறைப்பாடு (Report) செய்யுமாறும் . முதலீடு செய்வதற்கு முன் அனைத்து நிதி வாய்ப்புகளையும் முறையான மூலங்களின் ஊடாக சரிபார்க்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

பிரதமர் அலுவலகம் என்ற வகையில், இணையவழி ஊடாக மேற்கொள்ளப்படும் மோசடிகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவதுடன், மேலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். தவறான தகவல்கள் மற்றும் மோசடியான தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்குமாறும், இதுபோன்ற பிரச்சாரங்களில் பொறுப்புடன் செயல்படுமாறும் அனைத்து ஊடக நிறுவனங்களிடமும், சமூக ஊடக ஆர்வலர்களிடமும் கேட்டுக் கொள்கிறோம்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை அறிய பிரதமர் அலுவலகத்தின் இற்றைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் சமூக ஊடகத்தை நாடுமாறு இந்நாட்டின் அனைத்துப் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

# “சிதைக்க சதி”

குறிப்பாக, தமிழ் மக்களின் நீண்ட கால பாரம்பரிய கட்சியாக இருக்கிறது. இந்த தமிழரசுக் கட்சியை எப்படியாவது உடைத்து விட வேண்டும் என்ற விசமத்தனமான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கடந்த 75 வருடகால வரலாற்றில் சோரம் போகாத ஊழலில் ஈடுபடாத தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாக இந்தக் கட்சியே திகழ்ந்து வருகிறது.

இத்தகைய கட்சியை உடைக்க பலரும் பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தாலும் இது பலனளிக்காத நிலைமை ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறான நிலையில் ஜனநாயக தமிழரசு என்றும் புதிய தமிழரசு என்றும் புதிய புதிய பெயர்களைச் சொல்லிக் கொள்கின்றனர். அவ்வாறாகத் தமிழரசு கட்சியை உடைப்பவர்களுக்குத் தமிழரசு என்ற சொல்லும் தேவைப்படுவது ஆச்சரியமானது.

ஆக மொத்தத்தில் தமிழரசை உடைக்கும் முயற்சி ஒருபோதும் நிறைவேறாது. ஆனால் தெற்கத்தேயே சிங்கள நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் உடைக்கும் முயற்சியைத் தொடர்ந்து செய்தாலும் இது பலனளிக்காது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறேன். மேலும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நானும் பதில் செயலாளராக சுமந்திரனும் பதவிக்கு வருவதற்குப் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. யாப்பில் குளறுபடி செய்து இந்தப் பதவிகளுக்கு வரவில்லை. எமது கட்சியின் யாப்பிற்கு அமையத்தான் இப்போது அந்தப் பதவிகளை எடுத்திருக்கிறோம். இவ்வாறான நிலைமைகள் இருக்கத்தக்கதாக மக்கள் மத்தியில் பிழையான தகவல்களை பரப்பி விசமத்தனமான பிரசாரங்களை சிலர் மேற்கொள்கின்றனர். அதுவும் இப்போது தேர்தல் காலம் என்பதால் இன்னும் இன்னும் அதிகளவில் போலிப் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர்.

எனவே தமிழரசைப் பிளவுபடுத்தும் நோக்கில் முன்வைக்கப்படும் பொய்ப் பிரச்சாரங்களை சரியான முறையில் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழரசை இலக்கு வைத்து தமிழரசை உடைக்க முயற்சிகள் எடுத்தாலும் அதனூடாக விமர்சனங்கள் இருந்தாலும் அதையெல்லாம் தாண்டி நாம் முன்னேறுவோம்.

மாற்றான சிந்தனையில் பொறுப்பான அணுகு முறையைப் பின்பற்றி அனேகமாக எல்லா இடங்களிலும் சபைகளைக் கைப்பற்றுவோம். ஆனால், ஆட்சி அமைக்கத் தேவைப்படும் இடங்களில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேசுவோம் என்றார்.

## நாடு திரும்பிய...

அதன்படி, இந்த சந்தேக நபர் 12.03.2025 அன்று அதிகாலை துபாயில் இருந்து இந்நாட்டிற்கு வந்தடைந்ததும் விமான நிலைய குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார், மேலும் சீதுவ பொலிஸ் நிலையத்தால் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான அந்த பெண், மினுவங்கொட பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

## “நான் தடை...

அரசியல்வாதிகள் பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தடை செய்வது குறித்த தனது கருத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பின்வாங்கியுள்ளார்.

பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் அரசியல்வாதிகள் கலந்து கொள்வதைத் தடை செய்யும் சட்டம் எதையும் தான் விதிக்கவில்லை என்றும், அரசியல் நோக்கங்களுக்காகப் பாடசாலை முறையைப் பயன்படுத்துவதை அரசியல்வாதிகள் தவிர்க்க வேண்டும் என்று மட்டுமே தான் கூறியதாகவும் அவர் புதன்கிழமை (12) பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் தடையை மீறி ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொள்கிறார்கள் என்று SLPP பாராளுமன்ற உறுப்பினர் DV சானக கூறியதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல ஒரு பாடசாலை நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். அப்படியென்றால் ஆளும்கட்சிக்கு ஒரு நியாயம் எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என சானக்க தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் ”நான் அவ்வாறு தடை விதிக்கவில்லை. அப்படி எந்த சட்டமும் இல்லை. அந்த ஊடக அறிக்கை தவறானது” என்றார்.

# புதுகுடுகண்ணாவின் சகோதரர் கைது

டி.கே.ஜி.கபில



இந்தியாவின் சென்னையில் தலைமறைவாக இருந்து, ஹெரோய்ன், கொலை மற்றும் பல பிற வழக்குகளில் தேடப்பட்டு வந்த பாலச்சந்திரன் கஜேந்திரன், இலங்கைக்கு வருகை தந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் வியாழக்கிழமை (13) கைது செய்யப்பட்டார்.

கொழும்பு-மட்டக்குளியவில் வசிக்கும் பாலச்சந்திரன் கஜேந்திரன், (வயது 36), போலி ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் இந்தியாவின் சென்னையில் உள்ள சிறையில் இருக்கும் புகுடுகண்ணா என்றும் அழைக்கப்படும் பாலச்சந்திரன் கண்ணாவின் தம்பி ஆவார், பாலச்சந்திரன் கஜேந்திரன் 2023 முதல் இந்தியாவின் சென்னையில் உள்ளார். கொழும்பு குற்றப்பிரிவு, மாளிகாவத்தை, மோதரை மற்றும் கடலோர காவல்துறையினரால் விசாரிக்கப்பட்டு வரும் பல வழக்குகளில் தேடப்படும் நபராக உள்ளார்.

அவர் கண்டியைச் சேர்ந்த சுரேந்திரன் அருணகிரி என்ற பெயரில் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, வியாழக்கிழமை(13) அதிகாலை 2.00 மணிக்கு இந்தியாவின் சென்னையில் இருந்து இண்டிகோ விமானத்தில் ஏறினார். விமானம், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர், , கொழும்பு குற்றப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்குப் பிற்பகல் 01.30 மணியளவில் வந்து, மேலதிக விசாரணைக்காக அவரை அழைத்துச் சென்றது.

## தேசபந்து தலைமையில் குற்ற வலையமைப்பு



தேசபந்து தென்னகோன் தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பொலிஸ் அதிகாரிகளைப் பயன்படுத்தி ஒரு குற்றவியல் வலையமைப்பை இயக்கியதாக சட்டமா அதிபர் புதன்கிழமை (12) அன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

தென்னகோனின் கைது நடவடிக்கையை நிறுத்தக் கோரிய மனுவை விசாரித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரிகளைப் பயன்படுத்தி வெலிகமவில் உள்ள ஹோட்டல் மீது தாக்குதல் நடத்த அவர் திட்டமிட்டதாகக் மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒரு பொலிஸ் சார்ஜென்ட் மரணத்திற்கு வழிவகுத்த இந்த சம்பவம், தென்னகோனுக்கும் ஹோட்டல் உரிமையாளருக்கும் இடையிலான தனிப்பட்ட தகராறுடன் தொடர்புடையது என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

தென்னகோன் தனிப்பட்ட மோதல்களைத் தீர்க்க பொலிஸாரை "துணை இராணுவப் படையாக" பயன்படுத்தியதாகவும் பீரிஸ் மேலும் வெளிப்படுத்தியுள்ளார்.

## அனுராதபுர பெண் வைத்தியர் வன்புணர்வு:
# ஆணும் பெண்ணும் கைது; மூவருக்கும் விளக்கமறியல்

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவரை திங்கட்கிழமை (10) மாலையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்தில் மேலுமிருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான கல்னேவ நவநகரப் பகுதியைச் சேர்ந்த ‘பன்டி’ என்றழைக்கப்படும் நிலந்தா என்பவரின் 37 வயதுடைய சகோதரி மற்றும் 27 வயதுடைய ஆண் கல்னேவ நிதிகும்பயாய பகுதியில் வைத்து கைது நபரும் புதன்கிழமை(12) இரவு கைது செய்யப்பட்டனர்.

அனுராதபுரம் மருத்துவமனை பாலியல் வன்புணர்வு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் தலைமறைவாக இருப்பதற்கு உதவிய காரணத்திற்காக, அவருடைய சகோதரி கைது செய்யப்பட்டார் .

அதே நேரத்தில் சந்தேகநபரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் அலைபேசியை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், மற்றைய நபர் கைது செய்யப்பட்டார்.

பிரதான சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ், இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவரை பாலியல்



ரீதியாக துன்புறுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலும் விசாரணைக்காக 48 மணி நேரம் தடுத்து வைக்க, வியாழக்கிழமை (13) உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபருக்கு உதவியதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் சகோதரி மற்றும் மற்றொரு நபரை மார்ச் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை அனுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய பிறப்பித்துள்ளார்.

# "மனித வளத்தை உருவாக்குவது அவசியம்"



நாட்டின் உயர்கல்வியின் தரம் குறித்து திருப்தி அடைய முடியாது என்றும், கடந்த காலங்களில் ஏற்பட்ட நிறுவன சீர்கேடுகளே இந்த நிலைக்கு காரணம் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கான கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

ஒவ்வொரு துறையிலும் நாட்டுக்குத் தேவையான தலைவர்களை உருவாக்காமல் இந்த நாட்டை மாற்ற முடியாது என்ற உண்மையை அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் உணர்ந்துள்ளோம். எனவே, கல்வித் துறையை சரியான திசைக்கு கொண்டுவர நாம் முன்னுரிமை அளித்து செயற்படுகிறோம்.

கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான முதல் கட்டமாக, உயர்கல்வி நிறுவனங்களுக்கு முழுமையடையாத உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்யவும், வெற்றிடங்களை நிரப்பவும், தற்போதுள்ள பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்தவும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், விடுதி வசதிகள் அதிகரிக்கப்படவில்லை. அதற்கு நிதி அல்லது வேறு பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு பல்கலைக்கழகமும் மாணவர்களுக்கான விடுதிப் பிரச்சினைகளைத் தீர்க்க சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஹார்டி நிறுவனத்தைப் போலவே, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்துவம் உள்ளது. அந்த நிலையைப் பாதுகாத்து உயர்ந்த நிலையை நோக்கிச் செல்ல வேண்டும்.

பன்முகத்தன்மை கொண்ட பல நிறுவனங்கள் உள்ளன, அந்த நிறுவனங்கள் தங்கள் தனித்துவத்தைப் பாதுகாத்து இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

எதிர்காலத்தில் பாடசாலைக் கல்வியில் தொழிற்கல்வியை மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிப்போம். இவ்வாறான நிலையில், எதிர்காலத்தில் ஹார்டி கல்வி நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்படும்.

உயர்கல்விக்குப் பின்னர், அதிக மாணவர்கள் தொழிற்கல்விக்கு செல்கின்றனர், எனவே, தற்போதைய தொழிற்சந்தைக்கு மட்டுமன்றி, எதிர்கால தொழிற்சந்தைக்கும், பொருத்தமான மனித வளத்தை உருவாக்குவது அவசியம். இந்த நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தரம் குறித்து நாம் திருப்தி அடைய முடியாது. கடந்த காலங்களில் ஏற்பட்ட நிறுவனங்களின் வீழ்ச்சியும் இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.






# "மௌனத்தை கலைப்போம்"

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக வியாழக்கிழமை (13) அன்று கவனயீர்ப்பு-ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில், பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களும் முடிவு-கொண்டுவர மௌனத்தைக் கலைப்போம்" எனும் தொனிப் பொருளில் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியானது தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது.

- நிதர்ஷன் வினோத்












# "கே.ஆர்.டேவிட் நினைவுப் பகிர்வு"

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் நினைவுப் பகிர்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில், வினோதன் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை (14) மாலை 05.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

ச.முருகானந்தன், வசந்தி தயாபரன், தெ.மதுசூதனன் ஆகியோர் நினைவுப் பகிர்வுரையை ஆற்றவுள்ளனர்.



போதைப்பொருட்களுடன்

# சிவனடி சென்ற 393 பேர் சிக்கினர்

ரஞ்சித் ராஜபக்ஷ

பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலை தரிசனத்திற்கு வந்த 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் ரயில் நிலையம் உட்பட சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதிகளில் மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் 25-35 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்களை ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பமாகிய நாள் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் ஹெரோயின், ஐஸ், குஷ் மற்றும் சட்டவிரோத சிகரெட்டுகள் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்களை எடுத்துச் சென்ற 393 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் பெரும்பாலானோர் மேல் மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# கொலை செய்யப்பட்டு வீசப்பட்ட இளைஞன்

ஹம்பாந்தோட்டை - அங்குணுகொலபெலஸ்ஸ, அபேசேகரகம வீதி, கீரியகொடெல்ல சந்தியில், அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகிலுள்ள மேம்பாலத்தின் கீழ் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 23 வயதுடைய அபேசிங்க விஜேநாயக்க சந்தீப லக்ஷான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கொலை செய்யப்பட்டு பாலத்திலிருந்து வீசப்பட்டிருக்கலாம் என்று அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் சந்தேகிக்கின்றதுடன் இந்த மர்ம மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்புடன் இருவர் கைது

பாறுக் ஷிஹான்



சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனையின் போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த 19 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டு இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வீரமுனை-04 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் மற்றும் மற்றும் வீரமுனை-01 பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் நீண்ட காலமாக கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அதில் ஒருவரிடமிருந்து 13 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பும் மற்றவரிடம் இருந்து 6 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் சந்தேக நபர்களுடன் சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்க சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபான போத்தல்களில் தண்ணீரை கலந்ததால் 'சீல்'

அகரப்பத்தனை பகுதியில் அரசாங்க அனுமதி வழங்கப்பட்ட மதுபானசாலை ஒன்றில், மதுபான போத்தல்களில் தண்ணீர் கலப்படம் செய்த குற்றச்சாட்டின் பேரில் புதன்கிழமை (12) இரவு மதுபானசாலைக்கு சீல் வைக்கப்பட்டதுடன், மதுபான விற்பனை உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கலால் வரி திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த மதுபானசாலைக்கு சென்று மேற்கொண்ட சோதனையின் போது, அங்கிருந்த இரண்டு ஊழியர்கள் 750 மில்லி லீற்றர் போத்தல்கள் 51, அத்துடன் 375 மில்லி லீற்றர் போத்தல்கள் 48 மற்றும் 180 மில்லி லீற்றர் போத்தல்கள் 7 இல் மூடிகளை அகற்றி, அதற்குத் தண்ணீரை கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது மதுபான போத்தல்கள் மற்றும் மதுபான போத்தல்களைத் திறக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அகரப்பத்தனை, பசுமலை பகுதியில் நடைபெற இருக்கும் தேர் விழாவில் குறித்த மதுபானங்களை விற்பனை செய்யத் தயாராகி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலையில் யானை தாக்கியதில் இளைஞன் படுகாயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

அடர்ந்த காட்டுப் பகுதியில் யானைகள்-மனித மோதல்கள் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி அடிக்கொரு தடவை செய்திகள் வருகின்றன. அதில், மனிதர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். மனிதர்களால் முன்னெடுக்கப்பட்ட வேட்டைகளில் யானைகளும் மரணிந்துள்ளன.

எனினும், ஹட்டனில் யானையொன்று, இளைஞனைத் தாக்கிய சம்பவம், புதன்கிழமை (12) இரவு இடம்பெற்றுள்ளது. அது காட்டு யானையல்ல, தேர் பவனிக்காக கொண்டுவந்த யானையாகும்.

ஹட்டன்-கொட்டகலை நகரிலுள்ள ஆலயமொன்றில் நடைபெற்ற தேர் பவனிக்காக கொண்டு வந்த யானை, தேர் பவனி முடிந்து, ஓய்வெடுக்கக் கோவிலுக்கு அருகில், கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் உணவு கொடுக்க முயன்ற இளைஞனைத் தாக்கியுள்ளது.

காயமடைந்த இளைஞன் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், அவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யானைப் பாகன் அதிகமாகக் குடிபோதையில் இருந்ததால் இளைஞன், யானைக்கு உணவளிக்க முன்வந்தமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



# இணையவழி மோசடிகளில் விழிப்பாக இருக்கவும்

'கிறிப்டோ' என பொதுவாக குறிப்பிடப்படும் மறைக்குறி நாணயங்கள் தொடர்பில் பொதுமக்கள் விசாரணைகளையும் அவதானிக்கப்படும் அபிவிருத்திகளையும் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது 'கிறிப்டோ' நாணயங்களைப் பயன்படுத்துவதுடனும் முதலீடு செய்வதுடனும் தொடர்புடைய குறிப்பிடத்தக்க இடர் நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு ஏற்கெனவே வலியுறுத்தி இருக்கின்றது.

இந்நிலையில், பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் தற்போது விளம்பரப்படுத்தப்படும் மோசடியான 'கிறிப்டோ' பண வர்த்தகம் தொடர்பான மோசடியான விளம்பரங்களைப் பிரதமர் அலுவலகம் வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

'கிறிப்டோ நாணயம்' என்ற சொற்பதமானது மறைகுறியாக்கம் மற்றும் பகிரப்பட்ட பேரட்டு தொழில்நுட்பம் அல்லது அதையொத்த தொழில்நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற டிஜிட்டல் பெறுமதியின் பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிடுகின்றது.

'கிறிப்டோ-வர்த்தகம்', இலாபகரமான முதலீடொன்றாக சில நிறுவனங்களினால் பரந்தளவில் ஊக்குவிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், பொதுமக்கள் தாம் மேற்கொண்ட 'கிறிப்டோ' முதலீடுகளின் மூலமாக பாரியளவில் நட்டங்களைச் சந்தித்துள்ளனர் என்றும் சில சந்தர்ப்பங்களில் 'கிறிப்டோ'வுடன் தொடர்புடைய திட்டங்களினூடாக முன்னெடுக்கப்பட்ட நிதியியல் மோசடிகளுக்கும் ஆளாகின்றனர் என்றும் இலங்கை மத்திய வங்கிக்குக் கிடைக்கப்பெறுகின்ற அண்மைய முறைப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

'கிறிப்டோ' நாணயத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஏற்படும் குறிப்பிடத்தக்க நிதியியல், தொழிற்பாட்டு, சட்ட மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர் நேர்வுகள் அதேபோன்று, வாடிக்கையாளர் பாதுகாப்பு கரிசனைகள் பற்றி இலங்கை மத்திய வங்கி 2018,2021 அத்துடன், 2022ஆம் ஆண்டுகளில் ஊடக வெளியீடுகளினூடாக ஏற்கெனவே எடுத்துக்காட்டியுள்ளது.

'கிறிப்டோ' நாணய வணிகங்களில் ஈடுபட்டுள்ள பல்வேறு உலகளாவிய நிறுவனங்கள் அண்மையில் தோல்வியடைந்து சில 'கிறிப்டோ' நாணயங்களின் பெறுமதிகளின் நிலைகுலைவு மற்றும் இழப்புடன் இவ்விடர் நேர்வுகளும் கரிசனைகளும் ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. 'கிறிப்டோ' நாணயங்கள் இலங்கையில் சொத்து வகுப்பொன்றாக அங்கீகரிக்கப்படாத ஒழுங்குமுறைப்படுத்தப்படாத முதலீட்டுச் சாதனங்கள் என்பதைப் பொது மக்களுக்கு நினைவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த மோசடி விளம்பரங்களை சமூக ஊடகங்கள் ஊடாக ஊக்குவித்து, இலங்கை மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் வெளிநாட்டு நிறுவனங்கள் செயற்பட்டுவருவதுடன், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கையின் பிரபலமானவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி இந்த மோசடியான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

இந்த விளம்பரங்களின் முக்கிய நோக்கம் இந்த நாட்டில் உள்ள பிரபலமானவர்கள் குறித்த மக்களின் நல்லெண்ணத்தை மலினப்படுத்துவதன் மூலம் பொது மக்களைத் தவறாக வழிநடத்துவதும், பிரபலமானவர்கள் மீதான நம்பிக்கையைச் சிதைப்பதும் ஆகும் என்றும் பிரதமர் அலுவலகத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இணையவழி ஊடாக மேற்கொள்ளப்படும் மோசடிகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனையோ இழந்தபடி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்கே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலை சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியோர குப்பைகளால் மக்கள் அசௌகரியம்



பெரியநீலாவணை சந்தியில் இருந்து துறைநீலாவணை நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகள் குப்பைகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள குடும்பம் பாதிக்கப்பட்டுள்ளது மாத்திரமல்லாமல், அந்த சூழல் பாதிக்கப்பட்டு மாசடைந்து கொண்டிருக்கிறது.

இதனை அப்பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகரசபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். குப்பைகள் கொட்டுவதைத் தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை அல்லது மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமாறு என்று அந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

- வி.ரி.சகாதேவராஜா



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை –11

# சுதந்திரத்தைத் தொடர்ந்த பொருளாதாரத் தடம்புறழ்வுகள்

சுதந்திரத்திற்குப் பின் புதிய யு.என்.பி. அரசாங்கத்தின் உணவு உற்பத்திக் கொள்கையானது நெற்பயிர்ச் செய்கையில் மாத்திரம் அக்கறையுடன் இருந்தது. ஏனைய உணவுப் பொருட்களைப் புறக்கணித்தது. பாரம்பரியமாக, இவற்றில் பெரும்பாலானவை 'உயர்ந்த' பயிர்களாகவும், நெல்லுக்குத் துணைப் பயிர்களாகவும், சிங்களப் பயிரிடுபவர்களாலும், தமிழ் விவசாயியால் பணப்பயிராகவும் வளர்க்கப்பட்டன. சுதந்திரம் வரை, முறையான விரிவாக்கச் சேவைகள், ஆராய்ச்சி மற்றும் வழிகாட்டுதலுடன், இந்தப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடும் திறன் பெற்றன. ஆனால், அரசின் கொள்கை இந்த 'சிறு பயிர்களை' நோக்கிச் செலுத்தாமல், நெல் மட்டுமே மக்களின் 'முக்கிய உணவுப் பயிராக' இருந்ததால். நெல் (அரிசி) உற்பத்திக்கு அரசு உத்தரவாத விலையில் அளித்த பெரும் ஆதரவும் இந்தப் பயிர்களை விவசாயிகள் புறக்கணித்ததற்கு ஒரு காரணம். துணை உணவுப் பயிர்களைப் புறக்கணிப்பது முதல் யூ.என்.பி. நிர்வாகத்தின் போது ஆரம்பித்தது. 1960களின் பிற்பகுதியில் கடுமையான கொடுப்பனவுச் சிக்கல்கள் இந்தப் பயிர்களின் இறக்குமதிகளை முழுமையாகத் தடைசெய்யும் வரை சிறுபயிர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன. சுதந்திரத்தைத் தொடர்ந்த யு.என்.பி. ஆட்சியைத் தொடர்ந்து வந்த அனைத்து அரசாங்கங்களிலும் இந்தப் புறக்கணிப்புத் தொடர்ந்தது.

1960களில் ஏற்பட்ட அந்நியச் செலாவணிச் சிக்கல்களின் விளைவால் இச்சிறுபயிர்களின் இறக்குமதி தடை செய்யப்பட்ட பிறகுதான், இந்த மற்ற உணவுப் பயிர்களின் உற்பத்தி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, மூன்றாண்டுகள் என்ற குறிப்பிடத்தக்க குறுகிய காலத்தில், அவற்றில் பலவற்றில் நாடு தன்னிறைவை அடைந்தது. இந்த காலகட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட மற்றொரு முக்கிய பகுதி கால்நடை வளர்ப்பு ஆகும். 1948இல், நாடு ரூ.35 மில்லியனுக்கும் அதிகமான செலவில் 15 மில்லியன் பவுண்டுகள் பாதுகாக்கப்பட்ட பால் பொருட்களை இறக்குமதி செய்தது. 1957களில் இந்த இறக்குமதிகளின் மதிப்பு ரூ.60 மில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்தது. அவற்றின் நுகர்வு தொடர்ந்து வளர்ந்து வந்தாலும், பால் மற்றும் கால்நடை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அர்த்தமுள்ள கொள்கை எதுவும் உருவாக்கப்படவில்லை. இதன் விளைவாக, இலங்கையில் பால் பொருட்களின் தனிநபர் நுகர்வு உலகிலேயே மிகவும் குறைவாக உள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறியது. இது குழந்தைகளுக்கான நிறையுணவுச் சவாலை ஏற்படுத்தியது. மேலும் கால்நடைகளின் எண்ணிக்கை நாடு சுதந்திரமடைந்த போது, (1948 இல்) 1,248,000 ஆக இருந்து 1953இல் 1,228,000 ஆகக் குறைந்தது.

பல்வேறு காரணங்களுக்காக யு.என்.பி. அரசாங்கம் தொழில் மயமாக்கலை உறுதியாக எதிர்த்தது. நகர்ப்புற வணிக மற்றும் சொத்துரிமை பெற்ற வர்க்கங்களிலிருந்து அதன் அதிகாரத் தளத்தைப் பெற்றதால், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி மாற்றீட்டுக் கொள்கையை ஏற்க விரும்பவில்லை, ஏனெனில், இது முந்தையவற்றின் வர்த்தகத்திற்கு இடப்பெயர்ச்சியையும் பிந்தையவற்றின் நுகர்வுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தும். மேலும், எதிர்க்கட்சியில் உள்ள இடதுசாரி அரசியல்வாதிகள் நாட்டின் பொருளாதார சீர்குலைவுகளுக்கு ஒரே பரிகாரமாக உடனடி தொழில் மயமாக்கலைக் கோரினர். தொழில்துறை பாட்டாளி வர்க்கத்தினரிடையே தனது அதிகாரத்தைப் பலப்படுத்த இடதுசாரிகள் விரும்புவதாலேயே இந்தக் கோரிக்கை ஏற்பட்டதாக யு.என்.பி. கருதியது. தொழில் மயமாக்கலை நடைமுறைப்படுத்தினால் அது இடதுசாரிகளுக்கு வாய்ப்பாகும் என்று அஞ்சியது. 1952இல் இலங்கைக்கு வந்த உலக வங்கியின் குழுவானது, சிறிய அளவிலான தொழில்களை ஊக்குவிப்பதைப் பரிந்துரைத்த போதிலும், மூலதன-தீவிர தொழில்துறை முயற்சிகளுக்கு எதிராகவும் பரிந்துரைத்தது. தொழில் மயமாக்கலுக்குத் தேவையான வளங்களை உயர்த்துவது வெளிநாட்டுக்குச் சொந்தமான வணிகம் மற்றும் தோட்டுத் தொழிற்றுறை நலன்களுக்கு அதிகரித்த வரிவிதிப்பைக் கொண்டுவரும் என்றும் வெளிநாட்டு மூலதனம் வெளியேற வழிவகுக்கும் என்றும் உலக வங்கி கருதியது.

அரசாங்கம் எந்த தொழில் மயமாக்கலையும் தனியார் நிறுவனங்களுக்கு விட்டுக்கொடுத்தது. ஆனால், வெளிநாட்டுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்கள் மற்றும் தோட்டங்களை வாங்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்த நேரத்தில், உள்நாட்டுத் தனியார் மூலதனம் இன்னும் புதிதாக இருந்த தொழில்துறை சாத்தியங்களால் ஈர்க்கப்படவில்லை. 1951 மற்றும் 1954க்கு இடையில் தேயிலைத் தோட்டங்களில் வெளிநாட்டு நிறுவன உரிமை 63.8 வீதத்திலிருந்து 45 வீதமாகக் குறைந்தது, அதே நேரத்தில், இலங்கையின் உரிமை 19 வீதத்திலிருந்து 26 வீதமாகக் அதிகரித்தது. பொதுத்துறையில், இந்த நேரத்தில் நிறுவப்பட்ட ஒரே முக்கியத்துவம் வாய்ந்த தொழில்துறை முயற்சி காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஆகும். மின்சார உற்பத்தியில் அரசாங்கக் கொள்கை குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றது. 25 மெகாவாட் திறன் கொண்ட லக்சபானா நிலையத்தை இயக்குவதன் மூலம் யு.என்.பி. அரசாங்கம் முதன்முறையாக நீர் மின்சாரத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் அடுத்த தசாப்தத்தில் நாடு மின்சாரத்தில் தன்னிறைவை அடைவதற்கான அடித்தளத்தை அமைத்தது.

1952ஆம் ஆண்டு சீனாவுடனான வெற்றிகரமான அரிசி-இறப்பர் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, டட்லி சேனநாயக்கா அரசாங்கம் மே 1953இல் இறப்பர் மீள் பயிர்ச் செய்கைக்கான மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ், அதிக மகசூல் தரும் இறப்பர் வகைகளை நிலத்தில் மீண்டும் பயிர் செய்வதற்கு 100 ஏக்கருக்கு மேல் உள்ள தோட்டங்களுக்கு ரூ.700, 100 ஏக்கருக்கு கீழ் உள்ள தோட்டங்களுக்கு ரூ.900 மற்றும் 10 ஏக்கருக்கு கீழ் உள்ள சிறிய உரிமையாளர்களுக்கு ரூ.1,000 என்ற வகையில் உற்பத்தியாளர் மானியம் வழங்கப்பட்டது. பழைய இறப்பர் மரங்கள் 1951ஆம் ஆண்டில் ஏக்கருக்கு சராசரியாக 338 பவுண்டு மகசூல் அளித்தன. புதிய அதிக மகசூல் தரும் இனங்கள் ஏக்கருக்கு சராசரியாக 1,500 பவுண்டு மகசூல் தரும் திறன் கொண்டது. மறுபயிரிடல் திட்டம் முதலில் 1953 மற்றும் 1957க்கு இடையில் 65,000 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், உண்மையில் மீள் பயிர்ச் செய்கை செய்யப்பட்ட பரப்பளவு 94,000 ஏக்கரை எட்டியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தேயிலை மற்றும் தென்னைக்கு ஒப்பிடக்கூடிய மீள் பயிர்ச் செய்கைத் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக-அரசியல் நலன்புரி கொள்கை நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் கடுமையான தடைகளை ஏற்படுத்தியது.

1948இல் அரசாங்கம், செல்வம் உருவாக்கப்படுவதற்கு முன்பே, செல்வத்தை விநியோகிப்பதாக உறுதியளித்தது. அப்போதைய நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, 1947-8ஆம் ஆண்டுக்கான தனது பட்ஜெட்டில் இவ்வாறு கூறினார். 'இலவச கல்வி, இலவச பால் உணவு மற்றும் குழந்தைகளுக்கு இலவச உணவு, அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்கள் போன்ற எந்தவொரு முற்போக்கான சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் நாங்கள் நிறுத்தவோ அல்லது பட்டினியால் வாடவைக்கவோ விரும்பவில்லை. இந்தக் கொள்கைகளைப் பின்பற்றும் அதே வேளையில், நமது சக குடிமக்களின் பெரும் பகுதியினரின் வாழ்க்கைத் தரத்தையும் ஒரு சிறிய சலுகை பெற்ற சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரத்தையும் பிரிக்கும் இடைவெளியை இரு முனைகளிலிருந்தும் மூட முயற்சிப்போம்." தனது கொள்கைகளைப் பின்பற்றி, நிதியமைச்சர் கல்விக்கு ரூ.140 மில்லியனையும், சுகாதாரத்திற்கு ரூ.96 மில்லியனையும், உணவு மானியங்களுக்கு ரூ.78 மில்லியனையும் ஒதுக்கினார், அதே நேரத்தில் விவசாயத்திற்கு ரூ.79 மில்லியன் மட்டுமே கிடைத்தது.

இந்த சமூக நல நடவடிக்கைகளில் பெரும்பகுதி முன்னர் சட்டவாக்க அவையால் அறிமுகப்படுத்தப்பட்டது. இலவசக் கல்வி 1944இல் அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் இரண்டாம் உலகப் போரின் போது உணவுக்கான மானியங்கள் வழங்கப்பட்டன. யு.என்.பி. அரசாங்கத்தால் இந்தக் கடமைகளை நிராகரிக்க முடியவில்லை, ஆனால் அவர்களது பொருளாதார நிலைப்பாடுகள் சமூகநல அரசுக்கு எதிரானதாக இருந்தது. ஆனால், தேர்தல் நோக்கில் அவை முக்கியமானவை என்பதை யு.என்.பி அறிந்திருந்தது. இதனால் தமது சமூகநலத் திட்டங்களைப் பெருமையாகக் காட்டும் அளவிற்குச் சென்றனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது அடுத்த பட்ஜெட்டில் கூறியது போல், ' நமது தேசிய வருமானம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், அதில் பெரும் பகுதி நமது சமூக சேவைகளின் விரிவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படும். நமது மொத்த செலவினத்தில் சுமார் 40 வீதம் இப்போது சமூக சேவைகளுக்காகவே உள்ளது. சுதந்திர சிலோன் தன்னை ஒரு சமூக சேவை அரசு என்று நியாயமாகவும் பெருமையாகவும் அழைக்கலாம்."

இவ்வாறு பேசினாலும் நடைமுறையில் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியை எதிர்நோக்கியது. வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்தது. இந்தப் பற்றாக்குறையைக் கடன் வாங்குவதன் மூலம் சரி செய்யலாம் என அரசாங்கம் முடிவெடுத்தது.



# புகையிரத Warrant பதிவு டிஜிட்டல் மயமாகிறது

அனைவருக்கும் டிஜிட்டல் தீர்வுகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், SLT-MOBITEL, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகியன இணைந்து, ஓய்வூதியம் பெறுவோருக்கு தமது புகையிரத பயணங்களை இலகுவாக பதிவு செய்து கொள்ளக்கூடிய வகையில், SLT-MOBITEL இன் நவீன வசதிகள் படைத்த mTicketing கட்டமைப்பில் ஓய்வூதியம் பெறுவோருக்கான புகையிரத அனுமதிப்பத்திரங்கள் (warrant) செயன்முறையை ஒன்றிணைத்துள்ளன.

ஓய்வூதியம் பெறுவோருக்கான புகையிரத அனுமதிப்பத்திரங்கள் (warrant) டிஜிட்டல் மயப்படுத்தி அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரச நிறுவனங்கள், இலங்கை புகையிரத திணைக்களம், ஓய்வூதிய திணைக்களம் மற்றும் SLT-MOBITEL ஆகியவற்றின் சிரேஷ்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முன்னர், SLT-MOBITEL இன் சகல வசதிகளையும் கொண்ட டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பொது மற்றும் அரச சேவையாளர்களுக்கு டிக்கட்களை ஒன்லைனில் முற்பதிவு செய்து கொள்ளும் வகையில் eTickets மற்றும் eWarrant வசதி வழங்கப்பட்டது. இலங்கையில் புகையிரத சேவைகளை நவீன மயப்படுத்துவதில் முக்கிய முன்னேற்றமாக, தற்போது ஓய்வூதியம் பெறுவோருக்கும் தமது இல்லங்களில் சௌகரியமாக இருந்தவாறே டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பயணச் சீட்டுகளை சுலபமாக முற்பதிவு செய்து கொள்ளலாம்.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குனர் எனும் வகையில் SLT-MOBITEL, தேசத்தின் ஓய்வூதியம் பெறுவோருக்காக டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதையிட்டு பெருமை கொள்கின்றது. டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்தத் திட்டம் வெளிப்படுத்துவதுடன், ஓய்வூதியம் பெறுவோர், நாட்டுக்காக பல வருடங்களாக ஆற்றியுள்ள சேவைக்கான நன்றியை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. சாதாரண பயணிகளுக்காக கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட SLT-MOBITEL ஒன்லைன் முற்பதிவு கட்டமைப்பு வெற்றிகரமாக அமைந்திருந்ததை தொடர்ந்து இந்த அறிமுகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுவோருக்கான புகையிரத அனுமதிப்பத்திரங்களை (warrant) ஒன்லைன் கட்டமைப்பினுள் உள்ளடக்கியுள்ளமையினூடாக, சகல பிரிவினருக்கும் புகையிரத பயணச்சீட்டு தற்போது முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணத்துக்கு ஆதரவளிக்கும் SLT-MOBITEL இன் பரந்த அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாகவும் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. குறிப்பாக, அரச உரிமையாண்மையில் இயங்கும் நிறுவனங்களுக்கு சிறந்த இணைப்புத்திறன் தீர்வுகளை வழங்கி டிஜிட்டல் மயப்படுத்துவதை குறிப்பிடலாம். டிஜிட்டல் இலங்கையை உருவாக்கும் தேசிய நோக்கத்துக்கமைய இந்த நடவடிக்கை அமைந்துள்ளதுடன், சகல குடிமக்களுக்கும் அத்தியாவசிய சேவைகளை இலகுவாகவும் சௌகரியமாகவும் அணுகக்கூடியதாக செய்வதாக உள்ளது.

# பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் யூனியன் வங்கி *Power H.E.R.*

சர்வதேச மகளிர் தினத்துடன் தொடர்புபடும் வகையில், யூனியன் வங்கியினால் யூனியன் வங்கி Power H.E.R. திட்டத்தை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தமது வியாபாரங்களை மேம்படுத்தி புதிய உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்வதற்கு ஊக்குவித்து வலுவூட்டும் பெண்களுக்காக வங்கியியல் தீர்வாக அமைந்துள்ளது. யூனியன் வங்கி Power H.E.R. ஊடாக, தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்திருக்கும் நிலையில், பெண்களுக்காக வங்கியியல் தீர்வை இலவசமாக வழங்கும், ஒரே தன்னியக்கமயப்படுத்தப்பட்ட பண முகாமைத்துவ தீர்வாக அமைந்திருப்பதுடன், பரந்தளவு மாற்றியமைத்துக் கொள்ளதக்க நிதிவசதியளிப்பு, விசேட வட்டி வீதங்கள், காப்புறுதி, மானியக் கொடுப்பனவுகள், நிபுணத்துவ ஆலோசனை, வியாபார இணைப்புகள் மற்றும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

சந்தைப்படுத்தல் பிரிவின் உப தலைவர் திஷானி திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் காணப்படும் பெருமளவு சிறிய நடுத்தரளவு



தொழில்முயற்சியாண்மைகள் பெண்களை தலைமைத்துவமாக கொண்டவையாகும் அல்லது அவர்களின் உரிமையில் இயங்குபவையாகும். பெருமளவு பெண் தொழில்முயற்சியாளர்கள் நிலைபேறான வியாபாரங்களை உருவாக்க முயற்சிப்பதால், இந்தப் பிரிவு வளர்ச்சியடைந்த வண்ணமுள்ளது. யூனியன் வங்கி Power H.E.R. ஊடாக, அதன் இலவச பண முகாமைத்துவ தீர்வுக்கு பெருமளவு பெறுமதி சேர்க்கப்படுவதுடன், தொழில்முயற்சியாளர்களுக்கு நிதிசார் முகாமைத்துவம் தொடர்பில் கவலை கொள்ளாமல் தமது வியாபாரங்களை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும். மேலும், தேசிய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் (NEDP) இலவசமாக இணைந்து கொள்வதனூடாக, அவர்களின் வியாபார ஆற்றல்களை மேம்படுத்தி விரிவாக்கிக் கொள்ள ஆதரவளிக்கப்படும்” என்றார்.

பிரதம வியாபார அதிகாரி அசங்க ரன்ஹொட்டி கருத்துத் தெரிவிக்கையில், “யூனியன் வங்கி Power H.E.R. திட்டத்தினூடாக, வங்கியின் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்காக வழங்கப்படும் தீர்வுகளுக்கு மேலதிகமாக கவர்ச்சிரமான சலுகைகள் சேர்க்கப்படும். இதர அனுகூலங்களுடன், வங்கியினால், விவசாயம், உற்பத்தி மற்றும் சுற்றுலா போன்ற தொழிற்துறைகளுக்கு கடன்வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான அணுகல் வசதி வழங்கப்பட்டு, நாடு முழுவதையும் சேர்ந்த வங்கியின் பரந்த கிளை வலையமைப்பினூடாக, பெருமளவு பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனூடாக, வியாபாரங்களுக்கு தமது பிரிவுகளில் இயங்குவதற்கு அவசியமான ஆதரவு வழங்கப்படுகின்றது” என்றார்.

# பெண்கள் தினம்

ஆண்டின் ஒரு நாளல்ல, முழு நாட்களும்
பிரகடனப்படுத்தப்பட வேண்டும்
பெண்கள் தினமாக.
பெண்தான் உலகின் மையம்,
பெண்தான் மனித குலத்தின் வேர்,
பெண்தான் மனித உயிரின் கர்ப்பம்,
பெண்தான் மனித ஆன்மா.
பெண்ணின்றி உயிர்ப்பில்லை,
பெண்ணின்றி வளர்ச்சியில்லை,
பெண்ணின்றி அறிவில்லை,
பெண்ணின்றி அன்பில்லை, காதலில்லை,
பெண்ணின்றி எதுவுமில்லை.
பெண்ணே,
என் உணர்ச்சியின் கட்டுப்பாடு நீதான்,
எனக்குள் திரள்கின்ற இழி குணங்களின்
நுகத்தடி நீதான்,
என் வலிமையின் மூலம் மட்டுமல்ல,
அதன் இருப்பும் நீதான்.
மிருகத்தன்மை களைவதும் நான்
மனிதம் அடைவதும் உன்னால்தான்.
நீ பாதுகாக்கப்பட வேண்டியவள்,
“பாதுகாப்பு” என்ற சொல்லின் முழு
அர்த்தத்தில்
நீ பாதுகாக்கப்பட வேண்டியவள்.
வீட்டில், வெளியில், கல்விக் கூடத்தில்,
வேலைத் தளத்தில், இன்னும்
எங்கும் எப்போதும்
நீ பாதுகாக்கப்பட வேண்டியவள்
உன்னாலும் ஆண்களாலும்.
நீ உணரும் வலி மனித குலத்தின் வலி,
உனக்கேற்படும் அவமானம்
மனித குலத்தின் அவமானம்,
உன் துயரம் மனித குலத் துயரம்,
ஒரு தாயின் அவமானம்
அவளது பிள்ளைகளால் உணரப்படுவது போல்.
நீ இல்லை என்று சொன்னால் இல்லைதான்,
இயலாதென்றால் இயலாதுதான்,
வேண்டாம் என்றால் வேண்டாம்தான்.
நீ தான் முடிவு,
நீ தான் தீர்மானம்,
நீ தான் இறுதி.
பாலியலும் பாலூட்டலும்
பிள்ளை வளர்ப்பும் பராமரிப்பும்
உன் முடிவில்தான்.
நீ இல்லை என்று சொன்னால் இல்லைதான்.
நான் நம்புகின்ற வேதம்
இதைத்தான் எனக்குச் சொல்கிறது.
ஏனைய வேதங்களும் இதையே சொல்கின்றன
என நான் நம்புகிறேன் உறுதியாக.
பெண்ணே,
தாயாக, சகோதரியாக,
மனைவியாக, மகளாக,
எதிர்ப்படும் அனைத்துப் பெண்களுமாக,
உங்களிடம் நான் ஊழிக் கடன்பட்டுள்ளேன்
மனிதனாக இருப்பதற்காக.



- அஷ்ரபா நூர்தீன்

# உண்மை தரிசனம் பதிவு

கடல் கடந்த பறவைகள் நாங்கள்
தினம் கண்ணீர் விடும் பறவைகள்
தாய்த் தேசம் தள்ளி வந்து
தினம் தவிக்கின்ற பறவைகள்
தாயவளின் பாசம் இல்லை
தாய்மொழிக்கோ மதிப்பு இல்லை
தோழனவன் தோள்களில்லை
துயரம் சொல்ல நாதியில்லை
செல்வமீட்ட சென்றுள்ளான் என்று
சிலர் அங்கே சொல்லிடலாம்
செத்து செத்து வாழும் வாழ்க்கை
சிலருக்கேனும் தெரிந்திடுமோ?
தந்தையின் கடனடைக்க
தாயுமவள் நோயுடைக்க
தம்பியவன் மேல்படிக்க
தங்கையவள் மணமுடிக்க
பொறுப்புகள் எல்லாம்
பொறுப்பாய் கையசைக்க
புலம் பெயர்ந்த பறவை நாங்கள்
நோய்கள் வந்து நோகும் வேளை
நெஞ்சம் தொட கைகளில்லை
நினைவால் வரும் மழைக்கு மட்டும்
நித்தம் இங்கே பஞ்சமில்லை
மணம்முடிந்த மறுநாளே
மனையவளை பிரிந்திட்டோம்
மழலை மொழி கேட்கவில்லை
மயக்கும் நடை பார்க்கவில்லை
தூரம் தந்த பிரிவதனால்
துயரம்தானே எங்கள் பிள்ளை
காலங்கள் தொலைத்து வந்தோம்
கடமைகள் முடித்து வந்தோம்
கனவுகள் சுமந்து வந்தோம்
நினைவினில் மிதந்து வந்தோம்
தனிமையில் தவம் செய்து
தாய்மண்ணை தொட்டு நின்றோம்
குடும்பத்தோடு கொஞ்சிப் பேசி
கூடியிருந்த பொழுதொன்றில்
மனைவியவள் மொழியுரைத்தால்
மகனவனும் மேல்படிக்க
மகளவளும் மணமுடிக்க
மீண்டும் இதோ..
உயிர்மூச்சை பெருமூச்சாய்
உள்ளிழுத்து செல்கின்றோம்
தாய் நாட்டின் நேசத்தையும்
தமிழ் மொழியின் வாசத்தையும்...
இவன் கடமை முடியாதோ?
இவன் மரணமும் இங்கு
கிடையாதோ?



- றொசில்டா அன்டன்

ரஷ்யா

புட்டின் – ட்ரம்ப்

# விரைவில் பேச்சுவார்த்தை

உக்ரைன், ரஷ்யா போர் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகியோருக்கு இடையிலான பேச்சுவார்தை நடைபெற விரைவாக ஏற்பாடு செய்யப்படும் என, ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி பதவி ஏற்றார். அதன்பின் பெப்ரவரி 12ஆம் திகதி புட்டின் உடன் தொலைபேசியில ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்பின் இரு தலைவர்களும் பேசிக்கொள்ளவில்லை.






ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

சக ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற றியல் மட்ரிட், அத்லெட்டிகோவின் மைதானத்தில் வியாழக்கிழமை(13) அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றது. அந்தவகையில் மேலதிக நேர முடிவில் 2-2 என்ற மொத்த கோல் கணக்கு சமநிலையில் காணப்பட்ட நிலையில், பெனால்டியில் 4-1 என்ற ரீதியில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு றியல் மட்ரிட் தகுதி பெற்றது.

பெனால்டியில் றியல் மட்ரிட்டின் கிலியான் மப்பே, ஜூட் பெலிங்ஹாம் தமதுதைகளை உட்செலுத்திய நிலையில், அத்லெட்டிகோ மட்ரிட்டின் அலெக்ஸான்டர் சொர்லொத் தமதுதையை உட்செலுத்திய நிலையில், ஜூலியன் அல்வரேஸ் தனதுதையை செலுத்தும்போது இரண்டு தடவைகள் காலால் தொடுகையுற்றதாக அவ்வுதை நிராகரிக்கப்பட்டது. பின்னர் றியலின் பெடெரிக்கோ வல்வெர்டேயும், அத்லெட்டிகோவின் ஏஞ்சல் கொரேராவும் தமதுதைகளை உட்செலுத்திய நிலையில், றியலின் லூகாஸ் வஸ்கூஸின் உதையை அத்லெட்டிகோவின் கோல் காப்பாளர் ஜான் ஒப்ளக் தடுத்திருந்தார். பின்னர் தனதுதையை அத்லெட்கோவின் மார்கோ லொரெண்டே கோல் கம்பத்துக்கு மேலால் செலுத்த, றியலின் அந்தோனியோ ருடிகர் தனதுதையை உட்செலுத்த 4-2 என்ற ரீதியில் றியல் வென்றது.

இதேவேளை, பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியை வென்ற ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய டொட்டமுண்ட், லில்லியின் மைதானத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்று 3-2 என்ற மொத்த கோல் கணக்கிலேயே காலிறுதிப் போட்டிக்கு டொட்டமுண்ட் தகுதி பெற்றது.

அமெரிக்கா

சுனிதா வில்லியம்ஸ்

# பூமிக்கு திரும்புவதில் மேலும் தாமதம்



அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட இருந்த ஃபால்கன் 9 ரொக்கெட், தொழில்நுட்ப கோளாறு காரணமாக விண்ணில் ஏவப்படாமல், இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த ரொக்கெட் தான் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள நாசா விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோரை பூமிக்கு அழைத்துவரவுள்ளது.

ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்த ஹைட்ராலிக் இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் ரொக்கெட்டை விண்ணில் செலுத்தும் திட்டம் தாமதமாகியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஸ்பேஸ்எக்ஸ்-இன் டிராகன் க்ரூ 10 திட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு சரி செய்யப்பட்டால் இலங்கை நேரப்படி வெள்ளிக்கிழமை (14) அதிகாலை 4.56 மணிக்கு ரொக்கெட்டை விண்ணில் செலுத்த வாய்ப்பு உள்ளதாக, நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

நாசா விண்வெளி வீரர்களான ஆனி மெக்லைன், நிகோல் ஏயர்ஸ், ஜப்பான் விண்வெளி துறையைச் சேர்ந்த தகுயா ஒனிஷி மற்றும் ரோஸ்கோமோஸ் விண்வெளி வீரர் கிரில் பெஸ்கோவ் ஆகியோர் டிராகன் விண்கலத்திலிருந்து வெற்றிகரமாக வெளியேறி விட்டனர். மேலும், இந்த ரொக்கெட்டும் பத்திரமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திட்டமிட்டபடி, வியாழக்கிழமை(13) ஸ்பேக்ஸ்எக்ஸ் க்ரூ டிராகன் விண்வெளிக்குப் புறப்பட்டு இருந்தால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் மார்ச் 19ஆம் திகதி பூமிக்குத் திரும்பியிருப்பர்.

தற்போது இந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து, இருவரும் பூமிக்குத் திரும்புவது மேலும் தாமதமாகியுள்ளது.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், ரய்ப்பூரில் புதன்கிழமை (12) நடைபெற்ற இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 209/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் அம்பிறோஸ் ஆ.இ 69 (44), ஒய்ன் மோர்கன் 64 (32), டரன் மடி 29 (19), டிம் பிறஸ்னன் ஆ.இ 18 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஹில்பின்ஹஸ் 0/32 [4])

அவுஸ்திரேலியா: 210/7 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: நாதன் ரியர்டன் 83 (39), டான் கிறிஸ்டியன் 61 (28), பீற்றர் நெவில் 28 (18), ஷோர்ன் மார்ஷ் 20 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொன்டி பனேசர் 1/25 [4])

போட்டியின் நாயகன்: நாதன் ரியர்டன்.

உத்தரப் பிரதேசம்

ஹோலி கொண்டாட்டம்:

# பாஜக அறிவுரையால் சர்ச்சை



ஹோலி வண்ணங்களிலிருந்து பாதுகாக்க, முஸ்லிம்களை தார்பாலினாலான ஹிஜாப் அணியக் கூறி, உத்தரப் பிரதேச மாநில கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் ரகுராஜ் சிங் அறிவுரை வழங்கி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

வெள்ளிக்கிழமை (14), ஹோலி பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில், ஹோலியை முன்வைத்து உத்தரப் பிரதேச பாஜக தலைவர்கள் தொடர்ந்து முஸ்லிம்களை விமர்சித்து வருகின்றனர்.

இது குறித்து பாஜக ஆளும் உ.பியில் மாநில கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் ரகுராஜ் சிங் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது,

“இந்த ஆண்டு வெள்ளிக்கிழமை தொழுகையுடன் ஹோலியும் கொண்டாடப்பட உள்ளது.

“இந்த ஹோலியில் வண்ணங்கள் வீசி விளையாடிக் கொள்வார்கள். முஸ்லிம்கள் தங்கள் வெள்ளைத் தொப்பிகளையும், ஆடைகளையும் வண்ணங்களிலிருந்து பாதுகாக்க விரும்பினால், அவர்கள் தார்பாலினாலான ஹிஜாப் அணிய வேண்டும். “ஹோலி கொண்டாட்டத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் நிறங்கள் எங்கு விழுகின்றன என்பதை பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். எனவே, ஹோலியில் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வது முஸ்லிம்களின் பொறுப்பாகும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




# துடுப்பாட்டவீரராக மட்டும் மார்ஷ்

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுக்காக துடுப்பாட்ட வீரராக மாத்திரம் விளையாடுவதற்கு அவுஸ்திரேலியாவின் மிற்செல் மார்ஷ் (வயது 34) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு முதுகுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர், இலங்கைக்கான சுற்றுப்பயணத்தை மார்ஷ் தவற விட்டுள்ளார்.

பாகிஸ்தான்

ரயில் கடத்தல்:

# பணயக் கைதிகள் அனைவரும் மீட்பு



பாகிஸ்தானில், கிளர்ச்சியாளர்கள் கடத்திய ரயிலில் சிக்கியிருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட ரயிலில் இருந்து பயணிகளை மீட்கும் பணியின் போது, பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 28 வீரர்கள் உயிரிழந்ததாகவும், 30க்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன், 346 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதாகவும் குறித்த இராணுவ அதிகாரி, ஏ.எஃப்.பி. (AFP) நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு பலூச் விடுதலைப் படை (BLA) உரிமை கோரியது. தண்டவாளத்தில் வெடிப்பு நிகழ்ந்து, மலைகளில் மறைந்திருந்த இடங்களில் இருந்து துப்பாக்கி ஏந்தியவர்கள் வெளியே வருவது போன்ற வீடியோவை அவ்வமைப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெற்ற மகமதுல்லா



ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து தான் ஓய்வு பெறுவதாக சமூகவலைத்தளப் பதிவொன்றின் மூலம் புதன்கிழமை(12) தெரிவித்த பங்களாதேஷின் மகமதுல்லா, சர்வதேசப் போட்டிகளிலிருந்து முழுமையாக ஓய்வு பெற்றுள்ளார்.

டெஸ்ட்களிலிருந்து 2021ஆம் அண்டும், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து 2024ஆம் ஆண்டும் 39 வயதான மகமதுல்லா முன்னரே ஓய்வு பெற்றிருந்தார்.

இதுவரையில் 239 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 36.46 என்ற சராசரியில் 5,689 ஓட்டங்களைப் பெற்ற மகமதுல்லா, 82 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 14, மார்ச் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.